## மேல் மாகாண மாகாண சபை - சபைக் கூட்டம்
## 2013 மே மாதம் 07 ஆந் திகதி மு.ப. 09.30 க்கு

### நிகழ்ச்சி நிரல்

I. **தவிசாளரின் அறிவிப்புக்கள்**

II. **அறிக்கைகளையும், ஆவணங்களையும் சமர்ப்பித்தல்**

III. **செயற்குழுக்களின் அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்**

IV. **மனுக்கள்**

V. **கேள்விகள்**

01. **கௌரவ மஞ்சு சிறீ அரங்கல எதிர்க்கட்சித் தலைவர் அவர்களினால் போக்குவரத்து, விளையாட்டு, இளைஞர் விவகார, கலை, கலாசார நடவடிக்கை கூட்டுறவு அபிவிருத்தி, உணவு வழங்கல் மற்றும் பகிர்ந்தளிப்பு நடவடிக்கை, கிராம அபிவிருத்தி அமைச்சரிடம்கேட்பதற்கு :**
(கே/v (1)13/07)

அ. கொலன்னாவ கூட்டுறவு சங்கத்திற்கு கூட்டுறவு ஆணையாளரால் நியமிக்கப்பட்ட தவிசாளரின் தூரநோக்கற்ற நடவடிக்கையின் காரணமாக தங்கப் பதக்கத்தினை வென்ற சங்கம் அழிவுக்கு உட்பட்டுக் கொண்டிருக்கின்றது என்பதனை ஏற்றுக் கொள்கின்றீர்களா?

ஆ. தவிசாளர், கூட்டுறவுச் சங்கத்தின் வாகனம் உள்ளிட்ட சொத்துக்களை முறையற்ற ரீதியில் பயன்படுத்துகிறார் என்பதனை ஏற்றுக் கொள்கின்றீர்களா ?

இ. வாடிக்கையாளர், மற்றும் கிராமிய வங்கிப் பிரிவின் நிதி செயலிழந்த நிலைக்கு உட்பட்டுள்ளதனை ஏற்றுக் கொள்கின்றீர்களா?

ஈ. வங்கி வைப்பாளர்களின் நிதியை மீண்டும் செலுத்துவது, ஊழியருக்கு உரிய சம்பளத்தைச் செலுத்துவது என்பன சிக்கலுக்கு உட்பட்டுள்ளது என்பதனை ஏற்றுக் கொள்கின்றீர்களா ?

உ. கிராமிய வங்கிப் பிரிவுச் சங்கம் 02 வருடங்களுக்கு பெற்றுக் கொண்டுள்ள ரூபா 300 இலட்சம் நிதியில் வட்டி மற்றும் தவணைக் கட்டணமாக ரூபா. 5,914,201/- செலுத்தப்பட்டு மேலதிகப் பற்றாக ரூபா 500 இலட்சம் வரை அதிகரிக்கப்பட்டு 10 வருடங்களின் பின்னர் மீண்டும் செலுத்தும் காலம் நீடிக்கப்பட்டுள்ளது என்பதனை ஏற்றுக் கொள்கின்றீர்களா ?

ஊ. 2012.12.31 ஆந் திகதியில் சங்கத்தின் தேறிய நட்டம் ரூபா 1,012,132/- என்பதனை ஏற்றுக் கொள்கின்றீர்களா?

எ. தேசிய கூட்டுறவு சபையில் வைப்பில் இடப்பட்டிருந்த கிராமிய வங்கி வைப்பு ரூ. 17,688,652/- நிதி காலம் கடந்ததன் காரணமாக கொலன்னாவ மக்கள் வங்கியின் நடைமுறைக் கணக்கில் வைப்பிலிடப்பட்டுள்ளது என்பதனை ஏற்றுக் கொள்கின்றீர்களா?

ஏ. அந்த நிதியும் செலவு செய்யப்பட்டுள்ளது என்பதனையும் ஏற்றுக் கொள்கின்றீர்களா?

ஐ. இவ் உத்தியோகத்தர் சங்கத்தின் எல்லா சொத்துக்களையும் அழிக்கும் வரை இருப்பாரா ?

ஒ. என்ன காரணத்துக்காக சங்கத்தின் தேர்தல் நடாத்தப்படவில்லை ?

02. **கௌரவ மஞ்சு சிறீ அரங்கல எதிர்க்கட்சித் தலைவர் அவர்களினால் போக்குவரத்து, விளையாட்டு, இளைஞர் விவகார, கலை, கலாசார நடவடிக்கை கூட்டுறவு அபிவிருத்தி, உணவு வழங்கல் மற்றும் பகிர்ந்தளிப்பு நடவடிக்கை, கிராம அபிவிருத்தி அமைச்சரிடம் கேட்பதற்கு :**
(கே/v (1)13/08)

அ. கொலன்னாவ கூட்டுறவுச் சங்கத்திற்கு நெஸ்லே அங்கத்துவம் ஒன்று காணப்பட்டது என்பதனை ஏற்றுக் கொள்கின்றீர்களா ?

ஆ. சங்கத்திடம் காணப்பட்ட நெஸ்லே அங்கத்துவம் இல்லாமல் போய் உள்ளது என்பதனை ஏற்றுக் கொள்கின்றீர்களா ?

இ. நெஸ்லே பட்டியலைச் செலுத்துவதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் இன்றி கிராமிய வங்கிப் பிரிவின் ரூபா 485 இலட்சம் பாவனையாளர் பிரிவுக்கு மாற்றப்பட்டுள்ளது என்பதனை ஏற்றுக் கொள்கின்றீர்களா?

ஈ. சங்கத்துக்கு உரிய 80 இலட்சம் அளவு பெறுமதியான நெஸ்லே உற்பத்தியை நெஸ்லே ஸ்தாபனத்துக்கு ஒப்படைக்காது சங்கத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளது என்பதனை ஏற்றுக் கொள்கின்றீர்களா ?

உ. களஞ்சியத்தின் உள்ளேயே அப்பொருட்கள் காலாவதியாகி உபயோகிக்க முடியாத நிலைக்கு உட்படுகின்றன என்பதனை ஏற்றுக் கொள்கின்றீர்களா ?

ஊ. இந்த பொருட்களுக்காக நாளொன்றுக்கு ரூபா 15000/- தண்டப் பணம் ஒன்று நெஸ்லே நிறுவனத்துக்குச் செலுத்தப்பட வேண்டும் என ஏற்றுக் கொள்கின்றீர்களா?

எ. சங்கம் இப் பொருட்களை ஒப்படைத்து இப் பொறுப்புக்களில் இருந்து ஏன் விடுபடவில்லை?

VI. **வருகை தராமல் இருக்க அங்கீகாரம் பெறும் யோசனை**

VII. **அமைச்சுக்களின் அறிவிப்புகளும் / அமைச்சர்களின் தகவல்களும்**

VIII. **தனிப்பட்ட தெளிவுபடுத்தல்கள்**

IX. **அனுதாபப் பிரேரணை**

01. **முன்னைநாள் கௌரவ மாகாண சபை உறுப்பினர் ஆர்.எம்.டப்ளிவ். ரத்னாயக அவர்களின் மறைவு தொடர்பாக அனுதாபம் தெரிவிக்கும் பிரேரணை:**

*"மேல் மாகாண மாகாண சபையின் முதலாவது மாகாண சபைக்கு ஐக்கிய தேசியக் கட்சியை அங்கத்துவப்படுத்தி, கம்பஹ நிர்வாக மாவட்டத்தின் கௌரவ உறுப்பினர் ஒருவராகத் தெரிவு செய்யப்பட்டு, ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலம் மேல்மாகாண மாகாண சபைக்கும் மற்றும் மேல் மாகாணத்தின் மக்களுக்கும் பாரிய சேவை ஒன்றை ஆற்றிய முன்னைநாள் மாகாண சபை உறுப்பினர் ஆர்.எம்.டப்ளிவ். ரத்னாயக அவர்கள் அண்மையில் காலமானார்.*

*மேல் மாகாண மாகாண சபை அவரினால் ஆற்றப்பட்ட சேவையை மெச்சுவதுடன், அவரின் மறைவு தொடர்பாகத் தனது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றது"*

*(சமர்ப்பிப்பது: கௌரவ சபாநாயகர்)*

02. **முன்னைநாள் கௌரவ மாகாண சபை உறுப்பினர் எஸ். சந்திரசிறி டயஸ் அவர்களின் மறைவு தொடர்பாக அனுதாபம் தெரிவிக்கும் பிரேரணை:**

*"மேல் மாகாண மாகாண சபையின் இரண்டாவது மாகாண சபைக்கு ஐக்கிய தேசியக் கட்சியை அங்கத்துவப்படுத்தி, கொழும்பு நிர்வாக மாவட்டத்தில் இருந்து கௌரவ உறுப்பினர் ஒருவராகத் தெரிவு செய்யப்பட்டு, ஐந்து வருட கால அளவு மேல்மாகாண மாகாண சபைக்கும் மற்றும் மேல் மாகாணத்தின் மக்களுக்கும் பாரிய சேவை ஒன்றை ஆற்றிய முன்னைநாள் மாகாண சபை உறுப்பினர் சந்திரசிறி டயஸ் அவர்கள் அண்மையில் காலமானார்.*

*மேல் மாகாண மாகாண சபை அவரினால் ஆற்றப்பட்ட சேவையை மெச்சுவதுடன், அவரின் மறைவு தொடர்பாகத் தனது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றது"*

*(சமர்ப்பிப்பது: கௌரவ சபாநாயகர்)*

## X. தனிப்பட்ட உறுப்பினர்களின் நடவடிக்கைகள்

### 01. கௌரவ நிரோசன் பாதுக்க உறுப்பினர்

*" மேல் மாகாண சபையின் அதிகார பிரதேசத்தினுள் நிர்மாணிக்கப்பட்டுள்ள வியாபாரக் கடைத் தொகுதி, வைத்தியசாலைகள் உள்ளிட்ட பல்வேறுபட்ட கட்டட உரிமையாளர்களினால் அக் கட்டத்துக்கு உரிய வரைபடத்தினை அங்கீகரித்துக் கொள்ளும் போது வழங்கப்படும் பொது வசதிகள் மற்றும் வாகன தரிப்பிடத்தை பயன்படுத்தி வாடிக்கையாளரிடம் இருந்து நிதி அறவிடப்படுகின்றது. இவ் வாகனத் தரிப்பிடங்கள் அக் கட்டடங்களுக்கான அங்கீகாரத்தினை வழங்கும் போது நகர அபிவிருத்தி அதிகார சபையின் பிரமாணங்கள் மற்றும் உள்ளூராட்சி ஸ்தாபனங்களின் சட்ட திட்டங்களுக்கு அமைய நியமப்படுத்தப்படுவதுடன் அவ்வசதிகளுக்கு கட்டணம் அறவிடுவது சட்ட விரோதமான நடவடிக்கை ஒன்றாகும்.*

*எனவே இந்த பொது வசதிகளான, தனிப்பட்ட வாகனத் தரிப்பிடங்களில் இருந்து மக்களிடம் நிதியினைப் பெற்றுக் கொள்வதனை இரத்துச் செய்யுமாறும் எதிர்காலத்தில் அவ்வாறான ஸ்தாபனங்களுக்கு எதிராக வழக்குத் தொடர உரிய உள்ளூராட்சி ஸ்தாபனங்களுக்கு அதிகாரத்தை பெற்றுக் கொடுக்குமாறும் இம் மேல் மாகாண மாகாண சபை பிரேரணை தெரிவிக்கின்றது".* (பி/v (01)12/19)

## XI. சபை ஒத்திவைப்பு பிரேரணை

கே.எச்.டி.கே. சமரக்கோன்
செயலாளர்,
மேல் மாகாண மாகாண சபை

2013.04.23 ஆந்» திகதி

சபைச் செயலாளர் காரியாலயம் (மே.மா.)
மேல் மாகாண மாகாண சபை,
5ஆம் மாடி, B அலகு,
செத்சிறிபாய,
பத்தரமுல்ல.